Total No. of Questions : 50 ]

Total No. of Printed Pages : 4 ]

**Code No. 04**

# June/July, 2011

# TAMIL

Time : 3 Hours 15 Minutes ] [ Max. Marks : 100

***மாணவர்கள் கவனிக்க :***

i) வினாக்களின் எண்களைச் சரியாக குறிப்பிடவும்.

ii) விடைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

iii) மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

ஒரு வரியளவில் விடை தருக : 10 × 1 = 10

1. திருத்தக்க தேவர் இயற்றிய நூலின் பெயர் என்ன ?
2. முத்தொள்ளாயிரப் பாடல்கள் யார் யாரைப் புகழ்கின்றன ?
3. கண்ணன், கன்னனிடம் வேண்டியது என்ன ?
4. நால்வகைப் படைகள் யாவை ?
5. ஒய்வு ஒரு மருந்தாவது எவ்வாறு ?
6. மக்கள் கவிஞர் என்று பாராட்டப்பட்டவர் யார் ?
7. விடுகதை என்றால் என்ன ?
8. அப்துல்கலாம் தந்தையின் பெயர் என்ன ?
9. ஏவுகணைச் சோதனைத் தளம் எங்கு அமைக்கப்பட்டது ?
10. இஸ்ரோ கப்பலின் உண்மையான மாலுமி யார் ?

## பகுதி - II

அ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 4 × 2 = 8

11. திருத்தக்க தேவர் அருகதேவனின் சிறப்புக்களை எவ்வாறு பாடுகின்றார் ?
12. மணிமேகலைக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன ?
13. நாய்பெற்ற தெங்கம் பழம் - பழமொழி நானூறு கூறும் விளக்கம் யாது ?
14. பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை என்று யார் யாரை பாரதியார் குறிப்பிடுகின்றார் ?
15. புறாவைக் கொண்டு உலக ஒற்றுமையை பாரதிதாசன் எவ்வாறு விளக்குகிறார் ?

[ Turn over

ஆ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

16. கூத்து பார்ப்பது பற்றி அண்ணா கூறுவதை விளக்குக.

17. மனையியல் கல்வி திட்டத்தின் சிறப்புக்கள் யாவை ?

18. வெற்றிலையின் மருத்துவ குணங்கள் யாவை ?

19. நாட்டுப்புறப் பாடலின் சிறப்புக்களை எழுதுக.

இ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

20. A.D.E. இல் அப்துல்கலாமுக்கு கொடுத்த பணி யாது ?

21. பிருத்வி என்று ஏவப்பட்டது ? அதன் சிறப்புக்கள் யாவை ?

22. எஸ்.எல்.வி. திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை ?

23. வளைகுடாப் போர் இந்திய மக்களிடையே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது ?

## பகுதி - III

அ. எவையேனும் **இரண்டிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 2 × 3 = 6

24. 'இமயம் முதல் குமரி வரை பரந்த நாடு'

25. 'உன்னோடு உவந்து உரைக்கும் விண்ணப்பம் ஒன்று உண்டு'

26. 'நின் புண்ணியம் அனைத்தும் உதவுக'

ஆ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

27. 'தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்யடா'

28. 'மனையியலும் கல்வியியலும் ஒன்றே'

இ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

29. 'நமது சொந்த விமானத்தை நாமே உருவாக்குவோம்'.

30. 'நீங்கள் எதைக் கற்பனை செய்கிறீர்களோ

அது தான் செயல் வடிவம் பெறும்'.

## பகுதி - IV

அ. எவையேனும் **மூன்றிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 3 × 5 = 15

31. இவ்வுலகம் நிலை பெற்றிருப்பதற்கு இளம்பெருவழுதி கூறும் காரணங்கள் யாவை ?

32. இனியவை கூறல் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

33. கருணை மறவன், கோவலன் என்பதற்கு இளங்கோவடிகள் கூறும் விளக்கம் யாது ?

34. கடலின் காட்சியை கவிஞர் பாடும் விதத்தை விளக்குக.

ஆ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

35. கல்வியே அழியாச் செல்வம் என்பதை மறைமலையடிகள் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார் ?

36. எதுகை வடிவில் அமைந்த விடுகதையை விளக்குக.

37. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பின் உயர்வைப் புலப்படுத்துக.

இ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

38. அப்துல்கலாம் தன் இளம்பருவ கணித ஆசிரியரை எங்ஙனம் நினைவு கூறுகிறார் ?

39. தன் தந்தை மறைவு பற்றி அப்துல்கலாம் கூறுவதை விளக்குக.

40. அப்துல்கலாம் தன் வாழ்க்கை வரலாற்றை எழுதியதன் காரணங்களாக குறிப்பிடுவன யாவை ?

[ Turn over

## பகுதி - V

அ. கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி, அணியை விளக்குக : 1 × 5 = 5

41. 'குன்றேறி யானைப் போர் கண்டற்றால் தன்னகத்துஒன்று
உண்டாகச் செய்வான் வினை''

ஆ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 4 × 2 = 8

42. கம்பர் இராமாயணத்தை இயற்றினார்.
( செயப்பாட்டு வினையாக மாற்று )

43. தேர்வில் வெற்றி பெற முயற்சி செய்ய வேண்டும்.
( கட்டளை வாக்கியமாக மாற்று )

44. இரு பொருள் தருக :
i) பார்
ii) நகை

45. எதிர்ச்சொல் தருக :
i) இன்சொல் ×
ii) வேண்டுதல் ×

46. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :
i) முத்தமிழ்
ii) விண்ணப்பம்.

## பகுதி - VI

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

47. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

48. நீவிர் விரும்பும் இலக்கியம்.

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை தருக : 1 × 5 = 5

49. நீர் குடியிருக்கும் பகுதிக்கு மின்சார வசதி செய்து தரும்படி மாநகர ஆணையருக்கு ஒரு கடிதம் வரைக.

50. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' - பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்தெழுதுக.